செ. கு. எண்: 176 நாள்:28.08.2020

**<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் இரங்கல் செய்தி - 28.8.2020</u>**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஓ.எஸ். மணியன் அவர்களின் அன்பு மனைவி திருமதி கலைச்செல்வி அவர்கள் உடல்நலக் குறைவு காரணமாக, மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி இன்று (28.8.2020) காலை காலமானார் என்ற செய்தியை அறிந்து மிகுந்த வருத்தம் அடைந்தேன்.

திருமதி கலைச்செல்வி அவர்கள், திரு.ஓ.எஸ். மணியன் அவர்களின் பொது வாழ்வில் உற்ற துணையாக இருந்தவர். அனைவரிடமும் அன்பாக பழகக் கூடிய பண்பாளர்.

தனது மனைவி திருமதி கலைச்செல்வி அவர்களை இழந்து வாடும் திரு. ஓ.எஸ் மணியன் அவர்களுக்கும், அவரது குடும்பத்தினர் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**